மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து

தொகுக்கப்பட்ட **முத்தான கருத்துரைகள்**

மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **K. பழனிசாமி** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **K. பழனிசாமி** அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து

தொகுக்கப்பட்ட முத்தான கருத்துரைகள்

சிறப்பு வெளியீடு எண். 37

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2020

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

முத்தான கருத்துரைகள்

ஒன்றிணைவோம்

✶ வளமும் வலிமையும் மிக்க தமிழ்நாட்டைப் படைத்திடவும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட உறுதியேற்போம்.

புரட்சித்தலைவி

✶ பொதிகை தந்த தென்றல், புடம் போட்ட தங்கம், புரட்சியில் விளைந்த சுதந்திரம், பூமியில் பிறந்த புண்ணியம், கடையெழு வள்ளல்களின் வாரிசு, கடைக்கோடி ஏழையையும் வாழ்விக்கும் கருணை மழை, இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

மக்கள் பணி

✶ மாண்புமிகு அம்மா அவர்களின் அரசியல் பாசறையிலும், ஆட்சிப்பணியிலும் பயிற்சி பெற்றவர்கள் நாங்கள் என்பதால், அம்மா அவர்கள் வழியில் மக்கள் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறோம். நாங்கள் வகுக்கும் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்திலும் அம்மாவின் ஆன்மா இருக்கிறது.

கல்வித்துறையின் நோக்கம்

✶ நம் மாநிலத்தை அறிவுத் தலைநகரமாகவும் புதிய கண்டுபிடிப்புகளின் மையமாகவும் மாற்றுவது நமது உயர்கல்வித்துறையின் நோக்கமாகும்.

மக்களை அச்சமின்றி வாழவைக்கும் மாநிலம்

✶ மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு காக்கும் வகையில் நற்பணி செய்து மக்களை அச்சமின்றி வாழ வைக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த சேவை மையம்

✶ ஒருங்கிணைந்த சேவை மையம் என்பது பொது இடங்களிலோ, குடும்பத்திலோ, பணிபுரியும் இடத்திலோ பாதிக்கப்பட்ட பெண்களுக்கு துணைபுரியும் திட்டமாகும். உடல் ரீதியாக, பாலியல் ரீதியாக, உணர்வு ரீதியாக, பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வயது, ஜாதி, மதம், இனம், கல்வித்தகுதி, திருமணநிலை, கலாச்சாரம் போன்ற எந்தவித பாகுபாடுமின்றி உதவி அளிக்கும் திட்டமாகும்.

உள்ளாட்சி அமைப்பு

✶ ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, மக்கள் நசுக்கப்பட்ட மக்கள், அனைத்து தர மக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் அமைப்பானது உள்ளாட்சி அமைப்பு.

மருத்துவ முன்னோடித் திட்டங்கள்

✶ ஏழை, எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்கள் வாழும் பகுதிக்குஅருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர

மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இது மக்களுக்கான ஆட்சி

✶ மக்களின் ஆதரவு இருந்தால் எத்தனை ஆண்டுகளானாலும் இந்த ஆட்சி இருக்கும். இது மக்களுடைய ஆட்சி, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு.

விலை மதிப்பில்லா மனித உயிர்

✶ விபத்தைக் குறைக்க வேண்டும். மனித உயிர் விலை மதிக்க முடியாதது. எதை வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம். உயிரை சம்பாதிக்க முடியாது. அந்த உயிர் காப்பாற்றப்பட வேண்டும்.

உட்கட்டமைப்பின் அவசியம்

✶ ஒரு நகரம் வளர வேண்டுமென்று சொன்னால், மாநிலம் வளர்ச்சி பெற வேண்டுமென்று சொன்னால், உட்கட்டமைப்பு மிக அவசியம்.

இந்தியாவில் முன்னிலை

✶ மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைக் கண்காணிப்பதற்காக உட்சுற்று தொலைக்காட்சிக் கேமராக்கள் பொருத்துவதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னிலையில் உள்ளது.

பேரிடர் எச்சரிக்கை

- TN-SMART செயலி இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இச்செயலிமூலம் குறுகிய காலத்தில் பேரிடர் எச்சரிக்கைகள் தெரிவிக்கப்பட்டு, பெருமளவிலான உயிர்ச் சேதத்தை தவிர்க்க இயலும்.

கற்றல் திறன்

- தமிழ்நாட்டில் முதல்முறையாக அரசுப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள் QR Code மற்றும் காணொலிக் காட்சியுடன் இணைக்கப்பட்டு ஆற்றல்மிகு பாடப் புத்தகங்களாக உருவாக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் தேவைப்படும் பொழுதெல்லாம் எளிதாக கற்றிட இயல்கிறது. இதனால் அவர்களின் கற்றல் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டுள்ளது.

ஹஜ் மானியம்

- ஹஜ் பயணம் செல்ல கொடுக்கப்பட்டு வந்த மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், அதற்கு இணையான மானியத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.

சிறந்த செயல் திறன்

- ஜிஎஸ்டி வரியினை வெற்றிகரமாக செயல்படுத்தியதால் குறைந்த அளவிலேயே இழப்பீடு பெறும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. இது தமிழ்நாட்டின் சிறந்த செயல் திறனைக் காட்டுகிறது.

முன்னுரிமை

- குடிதண்ணீருக்கு முன்னுரிமை, கல்விக்கு முன்னுரிமை, எல்லாவற்றிற்கும் மேலாக, விவசாயத் துறைக்கு முன்னுரிமை வழங்குகின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்கிறது.

தொழில் வளத்தில் முதல் மாநிலம்

- நாட்டிலேயே அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்டும், தொழிற்சாலை வேலைவாய்ப்புகளில் முதலாவது மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.

பாதுகாப்பான சூழல்

- சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான சூழல் இருப்பதும், பழமை வாய்ந்த கோயில்களும், புராதன தலங்களும், தமிழ்நாட்டின் கலாச்சாரமும், உலகளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவருகிறது.

எண்ணிக்கையில் அல்ல மகிழ்ச்சி

- கோப்புகளில் கையொப்பமிடுவது என்பதை ஒரு சாதனையாக நான் கருதவில்லை. ஒவ்வொரு கோப்பும் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான ஒப்புதலாகவும், பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வாகவும், ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்திற்கு பயன்தரும் நலத்திட்டங்களுக்காகவும் இருக்கின்றது என்பதில் தான் மகிழ்ச்சியே தவிர எண்ணிக்கையில் அல்ல.

கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கைகள்

✶ அமெரிக்காவிலுள்ள ஹார்ட்வேர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க அதிக நிதி வழங்கப்பட்டது போல, தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களிலுள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவ உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலம்

✶ ஆரவாரமின்றி அமைதியாகவும், திடமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுவதால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது.

நூல்

✶ நீங்கள் தேர்ந்தெடுக்கும் நூல்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கக்கூடும். நூல்களைப் படித்து மேதையானவர்களைவிட, நல்ல மனிதர்களாக மாறியவர்கள் அதிகம் என்பதால் மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் நூல் வாசிப்பது மிகமிக அவசியம்.

முதலீட்டாளர் மாநாடு

✶ தமிழகத்தில் தொழில் முதலீடுகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு அதிகளவு முதலீடுகளை ஈர்ப்பது தான், உலக முதலீட்டாளர் மாநாட்டின் நோக்கமாக அமைந்துள்ளது.

பங்குதாரர்கள்

✶ தொழிற்சாலைகளின் கனவுகளை நிறைவேற்றும் கிரியா ஊக்கிகளாக எங்களது அரசு திகழும். தமிழகம் மற்றும் இந்தியாவின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் நாங்கள் பங்குதாரர்களாக இருப்போம்.

உறவுத்தமிழாய் உயர்ந்து நின்றவர்

✶ அன்னைத் தமிழ், ஆட்சித் தமிழ், இனிமைத் தமிழ், ஈகைத் தமிழ், உயிர்த் தமிழ், ஊக்கத் தமிழ், செந்தமிழ், தேன்தமிழ், ஏழிசைத் தமிழ், இனிமைத் தமிழ், ஒண்தமிழ், ஓதுதமிழ், கன்னித் தமிழ், சங்கத் தமிழ், முத்தமிழ் என்றெல்லாம் அடைமொழிகளோடு போற்றி புகழுகின்ற நம் தாய்மொழிக்கு "அறிவியல் தமிழ்" என்ற அடைமொழியை தந்து, 'அம்மா' என்ற உறவுத் தமிழாய் உயர்ந்து நின்றவர் நமது புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

சவால்

✶ பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கி, கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வறுமையை ஒழிப்பதற்கான கடினமான சவாலை அரசு எதிர்கொண்டுள்ளது.

முக்கியத்துவம்

✶ முதன்மைத் துறையை ஊக்குவித்து அதை வலுப்படுத்தும் அதே வேளையில் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

தனித்துவம்

★ நேர்மையுடனும், தனித்துவத்துடனும் பணியாற்றினால், உங்கள் பணிக்காலங்களில் நீங்கள் மேன்மேலும் சிறப்புகளைப் பெறமுடியும்.

தாய்மையின் உருவம்

★ பூமிக்கு வந்த புதுவிடியலாய், புண்ணிய நதியாய் தர்மத்தின் மறுபிறவியாய், தமிழர்கள் அத்தனை பேரின் இல்லங்களிலும் விளக்காய், எரியும் தீபமாய், அருந்தமிழ் மண்ணில் ஒரே தாயாக வந்த தாய்மையின் உருவாய் இருக்கும் அம்மா, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா!

தமிழ்த்தொண்டு

★ தமிழுக்குத் தொண்டு செய்வதென்றால், தமிழை வளர்க்கவும், தமிழைப் பாதுகாக்கவும், எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழ் அறிஞர்களை சிறப்பிப்பதாகும்.

மொழிப்போர் தியாகிகள்

★ ஒரு நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு எந்த அளவிற்கு அரசு சிறப்பு செய்து வருகிறதோ, அதே அளவிற்கு தமிழ் மொழியின் விடுதலைக்குப் பாடுபட்ட மொழிப்போர் தியாகிகளையும் அம்மாவின் அரசு நினைவுகூர்ந்து சிறப்பித்து வருகிறது.

உயிரினும் மேல்

★ ஒரு நாட்டுக்கே அடையாளம் மொழி என்கிறபொழுது, அது உயிரினும் மேலானதாக காக்கப்படவேண்டும்.

தமிழர் தம்முகம்

✶ தமிழ்மொழி தமிழருக்கு அடையாளம் என்றால், திருக்குறள் தமிழருக்கு முகமாக இருக்கிறது.

தமிழை நேசிப்போம்!

✶ தமிழை நேசித்தால், பிறந்த நாட்டையும், வணங்கும் தெய்வங்களையும், ஈன்ற பெற்றோரையும் நேசிப்பதற்கும், வணங்குவதற்கும் சமம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தலைசிறந்த படைப்புகள்

✶ எந்த நூல்கள் மனிதர்களின் மனதோடு பேசி அவர்களுக்குள்ளே தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றனவோ, அவைதான் உலகத்தில் தலைசிறந்த நூல்களாக, படைப்புகளாக மதிப்படுகின்றன, போற்றப்படுகின்றன.

தமிழர்களின் மொழியுணர்வு

✶ சிங்கப்பூர், மலேசிய போன்ற நாடுகளில் தமிழ்மொழி தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றால், பொருள் தேடி கடல் கடந்து சென்று குடியேறிய நாடுகளில் தன் அடையாளத்தை, தன் பண்பாட்டை மறக்காமல் இருக்கும் தமிழர்களின் மொழியுணர்வு தான் அதற்குக் காரணம்.

மொழி வளர்ச்சி

✶ எந்த நாட்டில் புலவர்கள் ஆதரிக்கப்படுகிறார்களோ அவர்கள் நாட்டில் தான் மொழி வளரும். மொழி வளர்ந்தால் அந்த நாடு வளரும்.

முன்னோர் வழங்கிய சொத்து

✶ நமது மூதாதையர் அறிவையும், அனுபவத்தையும் ஆவணப்படுத்தி நமக்கு சொத்தாக வழங்கிடுவது நூல்கள் தான்.

ஆயிரமாயிரம் கருத்துக்கள்

✶ ஆயிரமாயிரம் மலர்களின் மகரந்தச் சேகரமே தேன்கூடாக மாறுகிறது. ஆயிரமாயிரம் கருத்துக்களின் சேகரம் புத்தகங்கள்.

அறிவுச் சுரங்கம்

✶ புத்தகங்கள் வெறும் காகிதங்களின் கற்றை அல்ல. அவை உண்மையின் ஊற்றுக்கண். புத்தகத்தை திறப்பவன் அறிவுச் சுரங்கத்தின் வாயிலை திறக்கிறான்.

புத்தக வாசிப்பு

✶ சிக்கல்களை எதிர்கொள்வதற்கும், சவால்களை சந்திப்பதற்கும் புத்தக வாசிப்பு பெரும் துணையாகிறது.

சிறந்த புத்தகம்

✶ தூங்கச் சென்றவன் தூக்கம் வருவதற்காக புத்தகத்தை புரட்டுகிறபோது, எந்த புத்தகம் அவனைத் தூங்கவிடாமல் புரட்டிப் போடுகிறதோ அதுவே சிறந்த புத்தகம். படிக்க எடுத்த பிறகு, படித்து முடிக்கும் வரை கீழே வைத்துவிடாமல் நமது ஆர்வத்தை தூண்டச் செய்கிற புத்தகம் எதுவோ அதுவே சிறந்த புத்தகம்.

திறன் மிக்க மாநிலம்

- ✶ இந்தியாவிலேயே இரண்டாவது பொருளாதாரத் திறன் மிக்க மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் 8.4 சதவீதம் பங்குவகிக்கிறது.

தொன்மை மிக்க மொழி

- ✶ திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய் மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும், தூய்மையும் மிக்க மொழியாகவும், மொழிக்கு மட்டுமல்லாமல் வாழும் நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழியாகவும், உலக மொழிகள் அனைத்திலும் தொன்மைமிக்க மொழியாகவும் விளங்குவது நம் தாய்மொழியாம் தமிழ்மொழி.

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள்

- ✶ அம்மாவினுடைய அரசு விவசாயிகளின் அரசு. விவசாயிகளின் நலன் காக்கக்கூடிய அரசு. இரவு பகல் பாராமல் வெயில் மழை என்றும் பாராமல் உழைக்கின்ற விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற வேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என இரண்டு பேரையும் காக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மருத்துவ சுற்றுலாத்தலம்

✶ மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை அளிப்பதில் அரசு மருத்துவமனைகளோடு தனியார் மருத்துவமனைகளும் சிறப்பாக சேவையாற்றி வருகிறது. இன்றைக்கு வெளிமாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தரமான மருத்துவ சிகிச்சை குறைந்த செலவில் பெறுவதற்காக அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்குத்தான் வருகிறார்கள். அந்த அளவிற்கு வளர்ச்சியடைந்து "மருத்துவ சுற்றுலா" தலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

கல்வியின் பயன்

✶ ஒரு நாடு வளம்பெற வேண்டுமென்றால், கல்வி கிடைக்க வேண்டும். எந்த மாநிலத்தில் கல்வி கிடைக்கின்றதோ அந்த மாநிலம் வளரும். அந்த மாநிலத்திலே வளர்ச்சியைப் பார்க்க முடியும். அங்கேதான் உயர்வு காணப்படும். பொருளாதார மேம்பாடு அடையும், அமைதி நிலவும், அன்பு உயரும். ஒரே நேரத்தில் அத்தனையும் கிடைக்க வேண்டுமென்றால் கல்வி உயர வேண்டும்.

வேலைவாய்ப்பு

✶ பெரிய தொழில்கள் அதிகம் வந்தால்தான் சிறுதொழில்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏனென்றால், பெரிய தொழிலுக்குத் தேவையான உதிரி பாகங்களை சிறுதொழில் மூலமாகத்தான் கொடுக்கமுடியும். பெரிய தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றபொழுது சிறியதொழில் தானாக வளரும்.

வண்டியின் இரண்டு சக்கரங்கள்

✶ பெரிய தொழிலும், சிறிய தொழிலும் ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் போன்றது. இரண்டு சக்கரங்கள் இருந்தால்தான் இலக்கை அடைய முடியும். இரண்டு தொழில்களும் ஒன்றாக இணைகின்றபொழுது தான், தொழில் மேம்பாடு முன்னுக்கு வரும், தொழில் வளர்ச்சி காண முடியும்.

இசையின் ஆற்றல்

✶ மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவன் கடவுளாகவே கருதப்படுவான். அந்த மனிதத் தன்மையை அடைவதற்கு முதலில் நாம் எல்லோரும் ஒன்று என்ற எண்ணம் உண்டாக வேண்டும். நம் எல்லாரையும் ஒன்றிணைய வைக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு.

தேங்கக் கூடாது

✶ எந்த ஒரு கலையும் ஆற்றின் நீரோட்டம் போல ஓடிக்கொண்டிருக்க வேண்டும். தேங்கிப் போனால் அதனுடைய அழகும், இனிமையும் குறைந்து போய்விடும்.

கலையும் – பண்பாடும்

✶ கலையும், பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. தமிழகத்தின் மரபுக் கலைகளின் வழியாக பண்பாட்டினைப் பாதுகாத்திடவேண்டும்.

நோயற்ற வாழ்வு

✶ மருத்துவத்துறையில் தற்பொழுது நடைமுறையில் உள்ள அனைத்து நவீன சிகிச்சைகள், தமிழ்நாட்டு மக்களுக்கு

இலவசமாகவும், குறைந்த கட்டணத்திலும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நவீன வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தி வருகிறது. மக்கள் அனைவரும் இதை பயன்படுத்தி நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்.

குழந்தை தொழிலாளர்களை விடுவிப்போம்

* கல்வி எனும் செல்வம் பெற்று, வளர்ந்து, செழித்து, மிளிர வேண்டிய பருவத்தில், வேலைப் பளுவினைச் சுமந்து நிற்கின்ற குழந்தைகளை, குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும், உறுதி செய்வதே தமிழ்நாடு அரசின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

சாலை வசதியில் முதன்மை மாநிலம்

* மற்ற மாநிலங்களை தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது தமிழகம் உள்கட்டமைப்பிலே, சாலை வசதியிலே ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மருத்துவத்துறையில் சிறந்த மாநிலம்

* இந்தியாவிலேயே மருத்துவத்துறையில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடு. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் ஐந்து ஆண்டு காலமாக முதலிடம் பெற்று வருகிறோம். பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்திருக்கிறோம்.

அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம்

- ✶ ஒரு குழந்தை நன்றாக வளரவேண்டும் என்பதற்காக, கரு உருவாவதிலிருந்து, குழந்தை பிறக்கின்ற வரை நிறைய திட்டங்களை கொடுத்து, ஒரு தாய் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க வேண்டுமென்று அம்மா அளித்த திட்டம்தான், "அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம்".

தடையின்றி தண்ணீர்

- ✶ மழைக்காலங்களில் கிடைக்கின்ற தண்ணீரைத் தேக்கி, மக்களுக்கு தங்கு தடையின்றி தண்ணீர் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

தடுப்பணைகள்

- ✶ எங்கெல்லாம் பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றதோ அந்த பகுதிகளையெல்லாம் ஆராய்ந்து ஆய்வு செய்து அங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டப்பட்டு, தண்ணீரை மக்களுக்கு சீராக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

துயர் துடைக்கும் அரசு

- ✶ மாண்புமிகு அம்மாவின் அரசு, என்றென்றும் விவசாயிகளின் துயர்துடைக்கும் அரசாகவே விளங்குகிறது.

அறிவுசார் மாநிலம்

- ✶ தமிழகத்தை அறிவுசார் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டும்.

அரசின் இலட்சியத் திட்டம்

- ✶ கோதாவரி காவிரி இணைப்புத் திட்டம் இந்த அரசின் இலட்சியத் திட்டம். இதனை நிறைவேற்றும்பொழுது, டெல்டா பாசன விவசாயிகளுக்கு முழுமையான நீர் கிடைக்க தமிழக அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

அழிவில்லா பெருஞ்செல்வம்

- ✶ இந்த உலகத்தையே மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த கருவி கல்விதான். ஒருவனுக்கு அழிவில்லாத பெருஞ்செல்வமும் கல்விதான்.

மேகதாது எதிர்ப்பு

- ✶ மேகதாதுவில் அணைக்கட்டுவது தொடர்பான கருநாடகத்தின் திட்ட அறிக்கையை நிராகரிக்க வேண்டுமென தமிழக அரசு தொடாந்து வலியுறுத்தி வருவதுடன் தனது எதிர்ப்பையும் பதிவு செய்து கொண்டே வருகிறது.

கூடுதல் துணை மின் நிலையங்கள்

- ✶ மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பு மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின்தேவையை நிறைவு செய்யும் வகையில், சரியான மின் அழுத்தத்துடன் சீரான மின்சாரம் மக்களுக்கு வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியம்.

ஒத்துழைப்பு தருக

✶ தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்தி சுற்றுச்சூழலை மீட்டெடுக்க அரசு, எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

சிறார்கள் நலன்

✶ தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த கூர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறார்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

பாதுகாப்பான பயணம்

✶ மேம்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வருவதன் மூலம், சாலை உபயோகிப்பவர்களின் பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்படுவதுடன் பயணநேரமும் வெகுவாக குறையும்.

அம்மா ஓட்டுநர் பயிற்சி மையம்

✶ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுத் துறை ஓட்டுநர்களுக்கு புத்துணர்வுப் பயிற்சி அளிக்கவும், புதிதாக பணியில் சேர்த்தவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கவுமே ‘அம்மா ஓட்டுநர் பயிற்சி மையம்’.

ஏரிகள் தூர்வாருதல்

✶ ஒரே கால கட்டத்தில் அனைத்து ஏரிகளும் தூர்வார முடியாது. அதற்குத் தேவையான நிதி ஆதாரம் இல்லாத

காரணத்தினால் தான் படிப்படியாக குடிமராமத்து திட்டத்தின் மூலமாக அதிக பரப்பு ஏரிகளை எல்லாம் முதலிலே எடுத்து அனைத்து மாவட்டங்களிலுமே குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக பணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

நீதிக்கு முன் அனைவரும் சமம்

✶ நீதிக்கு முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை உறுதியாக கடைபிடிக்கும் மாநிலம் தமிழ்நாடாகும்.

நீதிக்கு தலைவணங்கிய மாமன்னர்கள்

✶ நீதிகேட்ட பசுவிற்காக அதன் கன்றை கொன்ற தனது மகனை தேர் காலில் இட்டு கொன்ற மனுநீதிச்சோழன், நீதி தவறியதற்காக தனது உயிரை விட்ட பாண்டிய மன்னன், புறாவிற்காக தனது தொடையிலிருந்து சதையை அறுத்துக்கொடுத்த சிபிசக்கரவர்த்தி போன்ற நீதிக்கு தலைவணங்கும் எண்ணற்ற மன்னர்கள் வாழ்ந்த நாடு தமிழ்நாடு.

நான்கு தூண்கள்

✶ இந்திய அரசியலமைப்பின்படி நீதித்துறை, ஆட்சித்துறை, சட்டமன்றத்துறை மற்றும் பத்திரிகைத்துறை ஆகிய நான்கு தூண்கள் தங்கள் எல்லைக்குள் சுதந்திரமாக செயல்படவேண்டும். அப்போதுதான் மக்கள் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழமுடியும். தமிழ்நாட்டில் இந்த நான்கு பிரிவுகளும் சுதந்திரமாக செயல்படுகின்றன.

சாதிப்போம்

- ✶ நாங்கள் சாமான்யர்கள், ஆனாலும் மகத்தான இம்மாநில மக்களின் அறிவாற்றலோடும், அயராத உழைப்போடும், சாதிக்க வேண்டியவற்றை சாதித்தே தீருவோம்.

இருமொழிக்கொள்கை

- ✶ மாண்புமிகு அம்மாவின் அரசு, இரு மொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளது.

மக்கள் நலன் காப்பதில் முன்னோடி

- ✶ தமிழ்நாட்டு மக்களை பாதிக்கக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு அதனை எதிர்த்து, மக்கள் நலனை பாதுகாப்பதில் முன்னோடியாக விளங்கும்.

வரலாற்றுச் சாதனை

- ✶ தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டும் வகையிலும் தமிழ்நாட்டு மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையிலும், பல்வேறு சட்டப் போராட்டங்கள் கோரிக்கைகள் ஆகியவற்றின் மூலம், காவேரி நீர் மேலாண்மை ஆணையமும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவும், அமைக்கப்பட்டு, பல்லாண்டு காலமாக தீர்வு காணப்படாமல் இருந்த காவேரி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கண்டது வரலாற்றுச் சாதனையாகும்.

காவலர் நிறைவாழ்வு பயிற்சித் திட்டம்

- ✶ காவல்துறையினர், அல்லும் பகலும் அயராது பாடுபட்டு தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக பாதுகாத்து

வருகின்றனர். அவர்களது மன நலன் மற்றும் குடும்ப நலன் ஆகியவற்றைப் பேணிக் காப்பதற்காக, “காவலர் நிறைவாழ்வு பயிற்சித் திட்டம்” என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வல்லரசு நாடாக உயர்த்துவோம்

✶ நமது முன்னோர்கள் செய்த தியாகத்தின் விளைவாக பெறப்பட்ட இந்த சுதந்திரத் திருநாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி, நமது நாட்டை ஒரு வல்லரசு நாடாக உயர்த்தவும், மேலும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உயர்த்திடவும் பாடுபடுவோம்.

சிந்திக்க வைக்க வேண்டும்

✶ கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அரசையும், மக்களையும் இணைக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை

✶ அரசு செயல்படுத்தும் திட்டங்களைப் பற்றி மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், அத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லும் பணியை செய்யும் துறை தான் செய்தி மக்கள் தொடர்புத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

தேச தியாகிகளுக்கு மணிமண்டபங்கள்

✶ தேசத்திற்காக பாடுபட்ட தேச பக்தர்கள், புகழ் சிறக்க அதிகமாக மணிமண்டபங்கள் கட்டியதும், சிலைகள் வைத்ததும் அம்மாவினுடைய அரசு தான்.

திருக்குறள் மொழி பெயர்ப்பு

✶ உலக அற இலக்கியமான திருக்குறளின் பெருமையை பரவச் செய்யும் வகையில், ஆண்டுதோறும் ஒரு இந்திய மொழி மற்றும் ஒரு உலகமொழி ஆகியவற்றில் திருக்குறள் மொழியாக்கம் செய்து வெளியிடப்படும்.

இயற்கை உரமாகும் வண்டல் மண்

✶ ஏரிகள், குளங்கள் முழுவதிலும் வண்டல் மண் அள்ளப்படுகின்றது. அதனை விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்துகின்றார்கள்.

வங்கி சேவைகள்

✶ பொதுவுடைமை வங்கியின் சேவைகள் கிராம மக்களுக்கு எட்டாத கனியாக இருந்த காரணத்தாலும், அரசு நலத் திட்டங்கள் யாவும் பொதுவுடைமை வங்கிகள் மூலம் கிராம மக்களுக்கு முழுமையாக கிடைக்காத காரணத்தாலும் அனைத்துக் கடைக்கோடி கிராம மக்களும் வங்கி சேவைகளை முழுமையாக பெற்றிட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் மண்டல, ஊரக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் எண்ணங்கள்

- ✶ இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ, அதை நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

- ✶ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஏராளமான கடனுதவி வழங்கி, அவர்கள் சுயமாக தொழில் தொடங்கி அவர்கள் சொந்தக்காலில் நிற்கக்கூடிய சூழ்நிலையை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகின்றது.

தாயின் கருப்பை

- ✶ இரவைப் பகலாக்கி, விழிகளை விளக்காக்கி, கண் துஞ்சாது, பசி நோக்காது, இயற்கை உபாதைகளைக் கூட தள்ளிப்போட்டு, மக்கள் நலனுக்காகப் பாடுபடும் காவல் துறையினரால் நாம் தாயின் கருப்பையின் கதகதப்பில் இருப்பதைப் போல் பாதுகாப்பாக இருக்கிறோம்.

பெண்கள் நலம்

- ✶ பெண்களின் நலனைக் காப்பதிலும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருவதால், நமது மாநிலத்தில் கடந்த 8 ஆண்டுகளாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருமளவில் குறைந்துள்ளன.

எப்போதும் தயார்

- ✶ மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு அளித்தால், அவைகளை

நிறைவேற்றவும், அரசு திட்டங்களில் உள்ள குறைகளை குறிப்பிட்டால், அவற்றைக் களையவும், மாண்புமிகு அம்மாவின் அரசு எப்பொழுதும் தயாராக உள்ளது.

உட்சுற்று கண்காணிப்பு கேமராக்கள்

★ பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதை தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில், இணையதள முறைமை கேமராவுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்புத் தொலைக்காட்சிக் கேமராக்கள் (சிசிடிவி) பொருத்தப்பட்டுள்ளன.

நாட்டிற்கே முன்னுதாரணம்

★ பல்வேறு சிரமங்களுக்கிடையே தங்கள் குடும்பங்களைப் பற்றி எண்ணிக்கூட பார்க்க நேரமின்றி காவலர்கள் தங்கள் கடமைகளை செய்து வருகின்றனர் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் இவ்வரசு அறிந்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், விருப்பங்களை நிறைவேற்றுவதிலும், நாட்டிற்கே முன்னுதாரணமாக இருந்து வருகிறது.

சீருடை அணிந்த சிப்பாய்கள்

★ காக்கிச் சட்டைக்கு அடையாளமாகி, கடமையாற்றுவதற்கு எடுத்துக்காட்டாகி, பறிகொடுத்தவர்களின் கண்ணீரைத் துடைத்து, உடைமை இழந்தோரின் வேதனை அகற்றி, சட்டம் ஒழுங்கு சரியாமல் காத்து, களவை ஒடுக்கி,

குற்றங்களை தடுத்து, ஏழை எளியோரின் உரிமைகளைக் காத்து, சாதிச் சண்டைகளற்ற – மத மோதல்களற்ற, ஆணவக் கொலைகளற்ற – அடக்கு முறைகளற்ற சமுதாயம் படைத்து, தமிழகம் முழுவதும் அமைதி தவழ, காவல் துறையினர் அனைவரும், தாங்கள் சீருடை அணிந்த சிப்பாய்கள் என்பதை உணர்ந்து, சமத்துவம் – மகத்துவம் பெறும் வகையில், உலகுக்கே கலங்கரை விளக்கமாக நம் மாநிலத்தை மாற்ற வேண்டும்.

அமைதிப் பூங்கா

✶ தமிழகம் இன்று தழைத்தோங்கும் அமைதிப் பூங்கா.

பாரத திருநாட்டின் பாதுகாப்பான மாநிலம்

✶ குற்றங்கள் குறைந்து, களவுகள் மறைந்து, விபத்துகள் சுருங்கி, சமூக விரோதிகளை சட்டத்தின் பிடியில் நிறுத்தி பாரதத் திருநாட்டில் பாதுகாப்பான அமைதி மாநிலமாய் தமிழகம் இன்று திகழ்கிறது.

வளர்ச்சிகாண அமைதி வேண்டும்

✶ ஒரு மாநிலம், பொருளாதார வளர்ச்சியின் உச்சத்திற்கு செல்லவும், அம்மாநில மக்கள் அனைத்து வகையிலும் மேம்பாட்டை அடையவும், அம்மாநிலத்தில் அமைதி நிலவுவது மிகவும் அவசியமானதாகும்.

சட்டத்தின் ஆட்சி

✶ ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு முக்கியமாக விளங்குவது காவல் துறையினரின் பணியாகும்.

மக்கள் இயக்கம்

★ மாநிலத்தில் தற்போது நிலவி வரும் கடுமையான நீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளவும், வரும் காலங்களில் இது போன்ற பற்றாக்குறை ஏற்படாமல் நீர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தீவிர நீர்வள ஆதாரப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம், மக்கள் இயக்கமாக தொடங்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

வளர்ச்சிக்கு உரம்

★ இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்றால், அந்த வளர்ச்சிக்கு உரமாக இருப்பது பல விடுதலைப் போராட்டத் தலைவர்களின் தியாகங்கள் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சிறு தானியப் பயிர்கள்

★ நமது உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான நுண்ணூட்டச் சத்தினை வழங்கவல்ல சிறுதானியப் பயிர்களை குறைந்த நீரில் சாகுபடி செய்ய முடியும் என்பதோடு மட்டுமல்லாமல், மண் வளம் குறைவான நிலப்பகுதிகளிலும் சாகுபடி செய்ய இயலும்.

டிஜிட்டல் ஒளிபரப்பு

★ கேபிள் டிவி ஒளிபரப்பை மக்கள் துல்லியமாக கண்டுகளிக்க ஏதுவாக, மாண்புமிகு அம்மா அரசின் தொடர் முயற்சியால் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்திடம் இருந்து டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் பெற்று, தொடங்கி வைக்கப்பட்டு, தற்பொழுது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பொதுமக்கள் அதிகம் விரும்பும் சேனல்களை வழங்கி வருகிறது.

மகத்தான பங்கு

✶ ஆங்கிலேயர்களை நம் மண்ணில் இருந்து அகற்றி, அடிமைத்தனத்தை தகர்த்தெறிய நடைபெற்ற போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு மகத்தானதாகும். அந்நியர்களிடம் இருந்து நம் தாய் மண்ணைக் காக்க இன்னுயிர் நீத்த பெருமக்கள் எண்ணில் அடங்காதோர்.

இரும்புக் கோட்டை

✶ “அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்” என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள்.

வெளிநாட்டுப் பயணம்

✶ வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க உதவியதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே தமிழ்நாட்டின் மீது ஒரு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதுதவிர தொழில்நுட்பம் மற்றும் நிருவாகம் சார்ந்த அறிவுசார் புரிதலுக்கு இந்தப் பயணம் ஒரு பேருதவியாக அமைந்த ஒரு வெற்றிகரமான பயணமாக இருந்தது.

மருத்துவ சேவை

✶ இந்தியாவில் தமிழ்நாடு தான் அதிக மருத்துவர்களைக் கொண்ட மாநிலமாகவும், தரமான மருத்துவ சேவைகளை

வழங்கும் மருத்துவ நிபுணர்களையும் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. தேசிய சுகாதார சேவையில் தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவர்களும், செவிலியர்களும் அதிக அளவில் பங்களித்துள்ளனர்.

உழைப்பு தந்த உயர்வு

✶ விசுவாசத்திற்கும், உழைப்பிற்கும் பெயர் பெற்றவர்கள் தமிழர்கள். அந்த உழைப்பு தான் உங்களை (அமெரிக்கா வாழ் தமிழர்கள்) உயர்த்தியிருக்கின்றது. இந்த உழைப்பு தமிழகத்திற்கு கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் மனமார, உளமார தொழில் முதலீடு செய்ய முன்வர வேண்டும்.

யாதும் ஊரே

✶ உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைத்திட ஒரு புதிய உறவுப்பாலம் அமைக்கும் தமிழ்நாடு அரசின் இந்த உன்னத முயற்சியாக தமிழ்நாடு அரசு தொழில்துறையின் கீழ் இயங்கும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் இணையதளமே ‘‘யாதும் ஊரே’’ என்பது.

தமிழ்ச் சொந்தங்கள்

✶ நாம் மாநிலத்தில் எந்த ஒரு இடத்தில் இருந்தாலும், இங்கே, அயல்நாடான அமெரிக்காவில், தொழிலதிபர்களாக, மருத்துவர்களாக, பொறியாளர்களாக, இன்னும் பல பணிகள் புரிகின்ற அத்தனை பேரும், தமிழ் என்ற ஒரு குடையின் கீழ் இங்கே குழுமியிருக்கின்றோம்.

நீர்வள ஆதார மற்றும் மேலாண்மை

- ✶ நமது நீராதாரங்களை பாதுகாக்கவும், அவற்றை பழைய நிலைக்கு மீட்டெடுக்கவும், நீர் நிலைகள் மாசுபடாமல் தடுக்கவும், பயன்படுத்திய நீரை மறுசுழற்சி செய்யவும், ஒரு சொட்டு நீரைக்கூட வீணாக்காமல் நாம் அதை சேமிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வேண்டுகோள்

- ✶ மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் அரசு என்பதையும், ஏழை, எளியோரின் நலன் காக்கும் அரசு என்பதையும், அவர்களுக்கு செயலாற்றும் அரசு என்பதையும் மக்கள் உணரும்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டங்களில் சுறுசுறுப்பாக களத்தில் இறங்கி அரும்பணியாற்ற வேண்டும்.

நீதியரசர்கள் – ஆசிரியர்கள்

- ✶ ஆசிரியர்களையும், நீதிபதிகளையும் மிகவும் மதிக்கின்றோம். நீதியரசர்களையும், ஆசிரியர்களையும், கடவுளுக்கு சமமானவர் என்று குறிப்பிடுவார்கள். ஆகவே, நீதியரசர்களையும், ஆசிரியர்களையும் இறைவனுக்கு சமமாக கருதுவோம்.

ஊக்குவிக்கும் அரசு

- ✶ தொழில் வளத்தைத் தவிர, விவசாயம் சார்ந்த தொழில்களை, குறிப்பாக, வேளாண் பெருமக்களுடைய வருமானத்தை, கால்நடை மற்றும் பால்வளத் தொழில்களை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து ஊக்குவிக்கும்.

மக்களை நாடி

- ✶ மக்கள் அதிகாரிகளை அணுகுவதைக் காட்டிலும், அதிகாரிகளே மக்களை நாடி மக்களிடம் மனுக்களைப் பெற்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதமாக முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தை அம்மாவின் அரசு செயல்படுத்தியுள்ளது.

சரியாக இருந்தால்தான்....

- ✶ ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் என்றால், ஒன்று அரசு, மற்றொன்று அரசு அதிகாரிகள். இந்த இரண்டும் சரியாக இருந்தால் தான் இலக்கினை அடைய முடியும்.

விரைவான நீதி நிறைவேற்றும் அரசு

- ✶ விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக் கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நீதிமன்றங்களின் தேவைகளுக்கு ஏற்ப உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற அரசாக என்னுடைய அரசு திகழும்.

நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழ்மொழியில்

- ✶ மாண்புமிகு அம்மாவின் அரசின் சீரிய முயற்சியின் காரணமாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டு வருகின்றன.

இணையான வசதிகள்

- ✶ கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும் நகரங்களில் வாழும் மக்களுக்கு இணையாக வசதிகளை செய்து கொடுத்த அரசு எங்களுடைய அரசு.

முன்னுரிமை

✶ தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக முன்னுரிமை கொடுத்து வருகிறது.

சிந்தாமல் சிதறாமல்

✶ பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மக்களின் இல்லங்களுக்கு கொண்டு சேர்க்கின்ற அளவிற்கு அம்மாவின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஏழை மக்களுக்கு வீடுகள்

✶ வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதை இலட்சியமாக எண்ணி அம்மா அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மழைநீர் சேமிப்பு

✶ விவசாயப் பெருங்குடி மக்கள், குடிமராமத்துத் திட்டத்தினை பயன்படுத்தி, மழை நீரை வீணாக்காமல் சேமித்து பயன்பெற வேண்டும்.

விவசாயிகளுக்கான அரசு

✶ அம்மாவின் அரசு மக்களின் அரசு, விவசாயிகளுக்கான அரசு.

வாழ்நாளின் முழுமை

✶ மனிதனது வாழ்க்கை அவன் கல்வியை கற்பதன் மூலமே முழுமை பெறுகிறது. பிறந்தது முதல் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது கற்றாலும், ஒருவனால் கல்வியில் முழுமை அடைய முடியாது.

குறிக்கோள்கள்

✶ எதிர்காலத்தில் அடைய வேண்டிய உயரிய குறிக்கோள்களை நாம் சிறு வயதிலேயே கொண்டிருக்க வேண்டும். இதனால் படிக்கும் காலங்களில் முழு கவனம் செலுத்தி நமது குறிக்கோளை எய்திட வேண்டும்.

செல்வத்துள் சிறந்த செல்வம்

✶ செல்வத்துள் செல்வம் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். பிற செல்வங்களெல்லாம் எந்தவொரு சூழ்நிலையிலாவது அழிந்துவிடும். ஆனால், நம் உயிர் இருக்கும் வரை நம்மோடு இருக்கும் ஒரே செல்வம் கல்விச் செல்வம்.

கல்வித் தொலைக்காட்சி

✶ கல்வி கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட கல்வி மேலும் சிறக்க கல்வித் தொலைக்காட்சியை மாணாக்கர்களுக்கு அரசு அர்ப்பணித்திருக்கிறது.

நீர் மேலாண்மை

✶ பொருளாதார வளர்ச்சிக்கு நீர் மேலாண்மை மிகவும் அவசியமானதாகும். பருவமழை பொய்க்கும் காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதற்கான நிரந்தர தீர்வைக் காண்பது மிகவும் இன்றியமையாதது.

ஒவ்வொரு துளியும் சேமிப்பு

- ✶ விண்ணிலிருந்து மண்ணில் விழும் ஒவ்வொரு நீர்த்துளியும் சேமிக்கப்பட வேண்டும். பயன்படுத்தப்பட்ட நீரும் மறுசுழற்சி செய்து முறையான பயன்பாட்டிற்காக செலவிடப்பட வேண்டும்.

தலைமுறையை பாதுகாப்போம்

- ✶ பெருகி வரும் மக்கள் தொகையையும், அதற்கேற்ப பெருகும் நீரின் தேவையினையும் கருத்தில் கொண்டு, இனி நாம் ஒவ்வொருவரும் நீரின் சேமிப்பைப் பற்றி சிந்தித்து, அடுத்த தலைமுறைக்கு வளமான நீராதாரத்தை விட்டுச் செல்ல வேண்டும்.

நீர்மிகை மாநிலம்

- ✶ நீர்வளத்தை பாதுகாப்போம்! அனைத்து வளத்தையும் பெருக்குவோம்! வறட்சியை விரட்டுவோம்! தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக உருவாக்குவோம்!

அரசின் கடமை

- ✶ ஒரு மனிதனுக்கு உயிர் எப்படியோ, அதுபோல் விவசாயத்திற்கு உயிராக இருப்பது நீர். எனவே, அந்த நீரை, ஒரு சொட்டுகூட வீணாகாமல் பாதுகாப்பது அரசின் கடமை.

கலைஞர்கள்

- ✶ கலைஞர்கள், நாம் நாட்டுக்காக வாழ்கிறோம் என்பதையும், நமது கலை, நாட்டு மக்களுக்காக, மக்களை மகிழ்விப்பதற்காகத் தான் என்பதையும் உணர்ந்து, கலைக்கு உயரிய சேவையையும் பங்களிப்பையும் அளிக்க வேண்டும்.

கதராடை தயாரிப்பில் முதலிடம்

- ✶ கைராட்டைகளைக் கொண்டு நெசவு செய்யப்படும் கதர் இரகங்களை தயாரிப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இயல், இசை, நாடகம்

- ✶ இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்ற அமைப்பு நமது மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தொலைநோக்குச் சிந்தனை

- ✶ பருவ காலங்களில் பொழிகின்ற மழைநீரை சேமிக்கும் வகையில், தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டம் ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளைத் தூர்வாரும் குடிமராமத்துத் திட்டம். இத்திட்டமானது முழுக்க, முழுக்க விவசாயிகளைக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிறக்கும் குழந்தைக்கும் உடனே நலத்திட்ட உதவி

- ✶ இந்திய வரலாற்றிலேயே பிறக்கின்ற குழந்தைகளுக்கு உடனே நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசு

✶ எந்தத் திட்டத்தை கொண்டுவந்தாலும், அந்தத் திட்டத்தை அறிவித்தவுடன், அந்தத் திட்டத்தை கண்காணித்து நடைமுறைப்படுத்தும் அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம்.

சிந்தித்து செயலாற்றுகின்ற அரசு

✶ எங்களுடைய காலத்தில் மக்களைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதை ஆய்வு செய்து, சிந்தித்து செயலாற்றுகின்ற அரசு, எங்களுடைய அரசு.

வனமே வாழ்வு

✶ ‘‘வனமே வாழ்வு’’ என்பதை உணர்ந்தவர்கள் நாம். காடுகளை நேசித்த மன்னர்களையும், மக்களையும் தமிழ்நாட்டின் வரலாறு நெடுகிலும், நம்மால் காண முடிகிறது.

மரகதப் போர்வை

✶ மரங்கள் மண்ணின் வளங்கள், காற்றின் கரங்கள், நிலங்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கின்றன. பறவைகளுக்கு சரணாலயம், இயற்கையின் வாசம்.

மரங்கள் அதிகரிக்கும்போது...

✶ மரங்கள் அதிகரிக்கும்போது காற்று குளிர்கிறது, வாயு மண்டலத்தில் உள்ள தட்பவெப்ப நிலையும் சீராகின்றது. கார்பன்–டை–ஆக்ஸைடின் அடர்த்தி

அதிகரிக்காமல் இருக்கிறது, ஓசோன் படலத்தில் ஓட்டை விழாமல் இருக்கிறது, பூமி புன்னகைக்கிறது, பயிர்கள் செழிக்கின்றன, நோய்கள் குறைகின்றன, நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது, ஆரோக்கியமான மனித வளம் நாட்டில் பெருகுகின்றது.

பாரம்பரிய உணவுப் பழக்கம்

- ✶ நமது அன்றாட வாழ்வில் பாரம்பரிய உணவுப் பழக்கத்தோடு உடற்பயிற்சியும் மேற்கொண்டு நாம் ஆரோக்கியமாக வாழவேண்டும்.

மரம் நடும் மக்கள் இயக்கம்

- ✶ மாண்புமிகு அம்மா அவர்களின் “மழை நீர் சேகரிப்புத் திட்டம்” எப்படி மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டதோ அதுபோல, மரங்கள் நட்டு நதியைப் பாதுகாக்கும் திட்டத்தையும், மக்கள் இயக்கமாக நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுத்த வேண்டும்.

உடற்பயிற்சி = யோகா – தியானம்

- ✶ உடற்பயிற்சி எவ்வாறு உடலை வலிமையாக்குகிறதோ, அதுபோன்றே மனதை புத்துணர்ச்சியூட்ட யோகா மற்றும் தியான பயிற்சிகள் அவசியமாகிறது.

நலமுடன் வாழ உறுதி

- ✶ நாம் மறந்து கைவிட்ட நமது முன்னோர்களின் பாரம்பரிய உணவை, நமது அன்றாட வாழ்வில், இனிமேல் தினசரி எடுத்துக் கொண்டு நலமுடன் வாழ உறுதி ஏற்போம்.

சிறுசேமிப்புத் திட்ட முதலீடு

★ மக்கள் தாங்கள் உழைத்து ஈட்டிய பணத்தை, பாதுகாப்பானதும், அதிக வட்டி அளிக்கக் கூடியதுமான அஞ்சலகச் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம், சிறுகச் சிறுக சேமிக்கப்படும் தொகை பன்மடங்காகப் பெருகுவதுடன், நாட்டின் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கும் அத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

கொடி

★ தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள், இமயமலை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று, தங்கள் வெற்றியைக் குறிக்க இமயமலையில் தங்கள் கொடியை பறக்க விட்டதாக வரலாறு கூறுகிறது.

கீழடி ஆய்வுகள்

★ நம் வரலாற்றின் தொன்மையை இதுவரை இலக்கிய சான்றுகள் கொண்டு நாம் விளக்கியதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், தேனி மாவட்டம் புள்ளிமான் கோம்பையிலும், பழநி அருகே உள்ள பொருந்தலிலும் நடுகற்கள் மற்றும் மண்பாண்டச் சான்றுகள் நமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போது, சிவகங்கை மாவட்டம், கீழடி ஆய்வுகள் வைகை நதிக்கரை நாகரிகத்தை உலகுக்கு பறைசாற்றுகின்றன.

முதல் எழுத்தறிவு பெற்ற சமூகம்

★ தமிழரின் தமிழி என்ற தமிழ் பிராமி எழுத்துக்கள், அசோகர் காலத்து பிராமி எழுத்துக்களுக்கும் காலத்தால்

முந்தியவை என்பதை உறுதி செய்கின்றன. இந்திய துணைக் கண்டத்தில் முதல் எழுத்தறிவு பெற்ற சமூகம் தமிழ்ச் சமூகம் தான்.

தமிழ்ப்பணி

✶ தமிழ் எங்கள் மூச்சு, தமிழ் எங்கள் பேச்சு, தமிழ் எங்கள் செயல்பாடு, தமிழ் எங்கள் உணர்வின் பூந்தென்றல் என்று தமிழ் வளர்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் இந்த அரசு தொடர்ச்சியாக தமிழ்ப் பணி ஆற்றி வருகிறது.

சட்டம் – ஒழுங்குக்கு மிகுந்த முக்கியத்துவம்

✶ பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் இருந்தாலும், அமைதியான சூழ்நிலை நிலவவில்லை என்றால் அங்கே எந்தவிதமான வளர்ச்சியும் ஏற்படாது. எனவேதான், பொது அமைதிக்கும், பாதுகாப்பிற்கும், சட்ட ஒழுங்கிற்கும் மிகுந்த முக்கியத்துவத்தை, மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது.

சட்டவிரோத செயல்கள் தடுப்பு

✶ தமிழ்நாடு காவல்துறையினர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினால், தீவிரவாத இயக்கங்கள் மற்றும் இடதுசாரி தீவிரவாத அமைப்புகளின் சட்டவிரோதச் செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன.

குறித்த நேரத்தில் பதவி உயர்வு

✶ காவல்துறையைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வரசு அவர்களுக்குண்டான பதவி உயர்வுகளை குறித்த நேரத்தில் வழங்கி வருகிறது.

வேலையும் – தரமும்

✶ ஒரு வேலையை நல்ல முறையில் செய்து முடித்தோம் என்ற பெருமை உணர்வு நமக்குள் இருந்து வரவேண்டும். வேலையின் தரமும், வேலையை செய்தவரின் தரமும் பிரிக்க முடியாதவை.

தேவை – சேவை

✶ மக்கள் தங்களது எந்த ஒரு தேவைக்காகவும் அரசு அலுவலகத்திற்கு நேரில் செல்லாமல் தான் இருக்கும் இடத்திலிருந்தே அனைத்து சேவைகளையும் பெற வேண்டும்.

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

✶ ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் பயன்பாடு திறம்பட செயல்படுவதுடன், குடிமக்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தும் வகையில் பிரமிக்கத்தக்க அளவில் முன்னேறியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் முன்னணி

✶ அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

உயர்வு தேடி வரும்

✶ உண்மையாகவும், நேர்மையாகவும், பணியாற்றினால் கண்டிப்பாக பதவி உயர்வு உங்களைத் தேடிவரும்.

வரலாற்று நிகழ்வு

✶ புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க மத்திய அரசிடம் கோரிக்கை வைத்தேன். எனது கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாட்டிற்கு ஒரே நேரத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவது ஒரு வரலாற்று நிகழ்வு ஆகும்.

தொல்லியல் ஆய்வு

✶ தொல்லியல் ஆய்வில் அகழாய்வு ஒரு முக்கியப் பணி என்றால், அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட பொருள்களை காலக் கணிப்புக்கு உட்படுத்துவது மற்றொரு முக்கியப் பணியாகும். உலகத்தரம் வாய்ந்த ஆய்வகங்களில் இவை ஆய்வு செய்யப்படுகின்றன.

நீர்த்தேக்கம் அமைக்க உரிமையில்லை

✶ மாநிலங்களுக்கு இடையிலான நதியில், இதர மாநிலங்களின் அனுமதியைப் பெறாமல் எந்த ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கும், எந்த மாநிலத்துக்கும் உரிமை இல்லை.

கல்வித்துறையின் சாதனை

✶ ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி படிக்கும் வகையில், கலை அறிவியல் கல்லூரிகள் மட்டுமல்லாது, சட்டக்கல்லூரிகளையும், தொழிற் கல்வி கற்பிக்கும்

பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரிகளையும் அதிக அளவில் திறந்து, எண்ணற்றச் சாதனைகளை கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தி வருகிறது.

ஊசியின் கூர்மை

✶ மாணாக்கர்கள் ஆகிய நீங்கள் கற்ற கல்வி, ஊசியின் கூர்மையைப் போன்றது. வெளி உலகில் நல்ல குடிமகனாக விளங்குவதற்கு பொது அறிவு, வாழ்க்கைக் கல்வி, ஞானம் அளிக்கக்கூடிய புத்தகங்களை படிப்பது ஆகியவை ஊசியின் காது போன்றது.

வாழ்க்கைக் கல்வியும் கற்றிடுக

✶ மாணாக்கர்களாகிய நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், உங்கள் கல்வி முழுமை பெற, நீங்கள் ஏட்டுக் கல்வியுடன், வாழ்க்கைக் கல்வியையும் சேர்ந்து கற்க வேண்டியது அவசியமாகும்.

மக்களின் பேராதரவு

✶ மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு அம்மாவின் அரசும், மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை தொடர்ந்தும் செயல்படுத்தி வருகிறது. அதனால் தான் மக்களின் பேராதரவு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு தொடர்ந்து நிலைத்து நிற்கின்றது.

நீர்வளம் மிக்க மாநிலம்

✶ தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக

அரசுதான். தமிழ்நாட்டை நீர் வளம் மிக்க மாநிலமாக மாற்றிக் கொண்டு இருப்பதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான்.

ஊடகங்களின் தாக்கம்

✶ நாட்டில் மக்களாட்சி தழைத்தோங்க அரசாங்கமும், ஊடகங்களும் இரு கண்கள் போல செயல்பட வேண்டும். ஊடகத்தின் மூலம் படிக்காத மக்களும் செய்திகளை கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. ஊடகங்கள் மக்களிடையே விழிப்புணர்வுடன், தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

ஒரே புள்ளியில் ஒருங்கிணைப்பு

✶ அரசின் அறிவிப்புகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிப்பதோடு ஏழை, எளியோரின் இன்னல்களை அரசுக்கு தெரியப்படுத்தவும், பின்னூட்டம் தருகின்ற செயல்பாடுகளில் செய்கின்ற சாதனமாகவும் ஊடகங்கள் செயல்பட்டு அரசு, நிருவாகம், மக்கள் ஆகியோரை ஒரே புள்ளியில் ஒருங்கிணைக்கின்றன.

நம்பகத்தன்மை

✶ ஊடகங்களின் மூலம் ஒளிபரப்பபடும் செய்திகளுக்கு மக்களிடையே அதிக நம்பகத்தன்மை உள்ளதைக் கருத்தில் கொண்டும், தனி மனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை மனதில் வைத்தும் (தொலைக்காட்சி) நிருவாகம் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும்.

விழிப்புணர்வு

✶ அரசாங்கம் எவ்வளவுதான் சட்டம் போட்டாலும், அதற்கு தூண்டுகோலாக தொலைக்காட்சி இருக்க வேண்டும். அப்படி நீங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றபொழுது, அது அரசுக்கும், மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

ஊடகங்களின் தார்மீகக் கடமை

✶ அதிக மக்கள் பார்க்க வேண்டும், பரபரப்பை ஏற்படுத்த வேண்டும், அதன் மூலம் பார்வையாளர்களின் புள்ளி அதிகரிக்க வேண்டும், விளம்பரங்கள் வெகுவாக வரவேண்டுமென்ற குறுகிய பார்வையில், செய்திகளை சரி பார்க்காமல், அவசரகதியில் வெளியிடாமல் நன்றாக ஆராய்ந்து, களத்தின் உண்மைத் தன்மையை அறிந்து வெளியிட வேண்டும். அதுவே, ஊடகங்களின் தார்மீகக் கடமை என்பதை உணர்த்த விரும்புகின்றேன்.

சர்வதேச தரத்தில் சாலைகள்

✶ சாலை என்பது வாகனப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு என்ற கருத்தினை மாற்றி, வயதானோர், குழந்தைகள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் என்று நமது சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களும் பாதுகாப்பாகவும், வசதியாகவும், பிறரை சாராமல் சுதந்திரமாகவும் பயணித்து மகிழும் வகையில் சர்வதேச தரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வன வளமும், நாட்டின் வளமும்

✶ நாட்டின் வளம் காடுகளின் வளத்திற்கு ஏற்ப அமையும். காடுகளின் பராமரிப்பும், பெருக்கமும் மனித இனத்திற்கு மட்டுமின்றி அனைத்து உயிர்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

சமூக நீதி காக்கும் அரசு

- ✶ சமூக நீதிக்கு ஆபத்து வரும் நேரங்களிலெல்லாம் அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து, அதனை களைய உரிய நடவடிக்கைகளை எடுத்து வரும் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான்

எண்ணற்ற திட்டங்கள்

- ✶ மாண்புமிகு அம்மாவின் அரசு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை வழங்கி, தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக்க தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம்

- ✶ மக்களாட்சியை தாங்கிப் பிடிக்கின்ற நான்கு தூண்களில் நீதித்துறையும் ஒன்று. நாடு அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் திகழ்வதில் நீதித்துறையின் பங்கு மகத்தானது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையின் அடிப்படையில் நமது நாட்டில் நீதி நிருவாகம் இயங்கி வருகிறது.

வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் அட்சயபாத்திரம்

- ✶ உலகமயமாக்கலின் சூழலால் வணிகச்சட்டம், சுற்றுச்சூழல் சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டம் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புகளும், வங்கி மற்றும் நிதி சார்ந்த துறைகளில் சட்ட வல்லுநர்களின் தேவை அதிகமாக உள்ளதால், வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளும், குடிமைப் பணிக்கான போட்டித்

தேர்வு, அரசுத் துறைகளுக்கு போட்டித் தேர்வுகளிலும் தேர்வு செய்யப்பட்டு, வேலை வாய்ப்புகளை அள்ளித் தரும் அட்சய பாத்திரமாக சட்டப் படிப்பு இன்றைக்கு மாறி வருகின்றது.

தரமான சட்டக்கல்வி

- ✶ ஒவ்வொரு சட்டக் கல்லூரியிலும் அதிநவீன வசதியுடைய இணைய வசதிகள், நவீன நூலகங்கள் மற்றும் சர்வதேச தரத்திலான மாதிரி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களது வழக்காடும் திறமையை மேம்படுத்திட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி அரசு தரமான சட்டக் கல்வியினை வழங்கி வருகிறது.

சட்டக் கல்லூரி ஆசிரியரின் பணி

- ✶ கல்லூரி மாணவர்களுக்கு கல்வி போதிப்பது என்பது சவாலான காரியம்தான் என்றாலும், சட்டக்கல்லூரி ஆசிரியராகிய நீங்கள் வெறும் வகுப்பறை ஆசிரியராக மட்டுமல்லாமல், மாணவர்களின் உற்ற தோழனாகவும், நல்ல வழிகாட்டியாகவும், சிறந்த முன்மாதிரியாகவும் இருந்து அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

சட்டக் கல்லூரி மாணவர் கடமை

- ✶ சட்டக்கல்லூரியின் மாணவர்களாகிய நீங்கள் தான் வருங்காலத்தில் நீதியையும் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டியவர்கள். எனவே, மாணவப் பருவத்தில் இருக்கும் நீங்கள் எவ்வித கவனச் சிதறலுக்கும் இடம் கொடுக்காமல்,

கல்வியில் முழு கவனத்தையும் செலுத்தி, வருங்காலத்தில் சிறந்த வழக்கறிஞர்களாகவும், நீதிமான்களாகவும் உருவாக வேண்டும்.

ஒப்பந்த சாகுபடி முறைக்கு தனிச் சட்டம்

✶ அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்த சட்டமும், எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படாத நிலையில், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலில் தனிச் சட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது என்பது தனிச்சிறப்பாகும். இது விவசாயிகளுக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வரலாற்றுச் சாதனை.

நன்மையை ஏற்போம்: தீங்கினை எதிர்ப்போம்

✶ தமிழகத்திற்கு நன்மை பயக்கின்ற திட்டத்தை ஆதரிப்போம், தமிழக மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் திட்டம் எதுவாக இருந்தாலும், அதை எதிர்க்கக்கூடிய மனநிலை இருக்கும் ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம்.

நிருவாக சீர்திருத்தத்தில் புதிய அத்தியாயம்

✶ ஒரு மாவட்டம் பிரிக்கப்படுகிறது என்றால், தமிழ்நாட்டின் வரைபடத்தில் சில கோடுகளை மாற்றி வரைவது அல்ல. மாறாக, நிருவாக சீர்திருத்தத்தில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி இருக்கிறது என்று பொருள். மக்களுக்குத் தொண்டு செய்யக்கூடிய ஓர் அரசு, அந்த மக்களிடம் நெருங்கிச் சென்று, அவர்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கை எடுக்கிறது என்று பொருள்.

செயலில் காட்டும் அரசு

✶ வேளாண் பெருமக்களுக்குத் தேவையான புதிய, புதிய திட்டங்களை அம்மாவின் அரசு தான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அம்மாவின் அரசு வேளாண் பெருமக்களின் அரசு, விவசாயிகளின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசு என்பதை நாங்கள் செயல்களில் காண்பித்துக் கொண்டிருக்கின்றோம்.

விவசாயியின் தலைமையிலான அரசு

✶ விவசாயிகளின் உணர்வுகளை நன்கு உணர்ந்த ஒரு விவசாயியின் தலைமையிலான அரசால், விவசாயிகளுக்காக இது போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும், வேளாண் பெருமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெகிழி தடை

✶ ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியைத் தடை செய்து, அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. வருங்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டும், அவர்களின் சுகாதாரமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையிலும், இதை முழுமையாக கடைபிடிக்க வேண்டும்.

நேரில் சென்று தீர்வு காணும் அரசு

- ✶ ஏழை, எளிய மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய அதிகாரிகளே நேரடியாகச் சென்று முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக மனுக்களைப் பெற்று, தகுதியான மனுக்கள் அனைத்திற்கும் தீர்வு காணுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு.

வரலாற்று சாதனை படைக்கும் அரசு

- ✶ ஒரே ஆண்டில் 5 புதிய மாவட்டங்களைத் தோற்றுவித்தப் பெருமை, அம்மாவின் அரசைச் சாரும். அதுமட்டுமல்ல, இதுவரை, தமிழக வரலாற்றில் ஒரே நாளில் இரண்டு மாவட்டங்களைத் தொடங்கிய வரலாறு கிடையாது, அந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்த அரசு, அம்மாவின் அரசு தான்.

சுயரூபம் ஒருநாள் வெளியாகும்

- ✶ மக்களுக்கு நன்மை செய்யத் துடிப்பது போல் நடிப்பவர்களின் சுயரூபம், மக்களுக்கு ஒரு நாள் கண்டிப்பாகத் தெரிய வரும். அன்று மக்கள் அவர்களைத் தெரிந்துகொண்டு தக்க பாடம் புகட்டுவார்கள்.

பயிர் காப்பீடு

- ✶ வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. இந்தியாவிலேயே பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு இழப்பீட்டைப் பெற்றுத் தந்த மாநிலம் தமிழ்நாடு.

இரவு பகல் பாராமல் உழைக்கின்ற அரசு

✶ தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை நன்கு உணர்ந்து, மத்திய அரசிடமிருந்து எதைப் பெற முடியுமோ அதை கேட்டுப் பெற்று இன்றைக்கு தமிழ்நாட்டை வளம் பெறுகின்ற மாநிலமாக உருவாக்குவதற்கு நாங்கள் இரவு, பகல் பாராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

மத்திய அரசுடன் இணக்கமான அரசு

✶ மாண்புமிகு அம்மா வழியிலே நடந்து கொண்டிருக்கும் எங்களுடைய அரசு, மத்திய அரசோடு இணக்கமாக இருந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் இருக்கின்றோம்.

மக்களுடைய அரசு

✶ இந்த அரசு, உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் நலன் பேணிக் காக்கின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு.

❖ ❖ ❖

“அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்“ என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை